சுவுரி

1. பச்சை இலை உண்ணும் புழு, கேடோப்சிலியா

பைராந்தி யூரிமா ஹெர்காபே:

சேதத்தின் அறிகுறி:

- இளம் இலைகளை உண்ணும்

பூச்சியின் விபரம்:

- புழு - உருளையாகவும், பச்சை நிறமாகவும், மஞ்சள் வண்ண பட்டைகளும் காணப்படும்
- அந்துப்பூச்சி - இறக்கையின் மேல்பகுதி வெள்ளை நிறமாக காணப்படும்
- ஆண் - முன்னிறக்கையில் நுனிப்பகுதியில் கருப்பு நிறத்தில் தோன்றும்
- பெண் - இறக்கையின் ஓரங்களில் கருப்பாகவும் வெளுப்பு புள்ளிகளும் காணப்படும்

கட்டுப்படுத்தும் முறை:

- கையால் பொறுக்கி அழிக்கவும்
- தாக்கப்பட்ட காய்களை புழுவோடு அழிக்கவும்
- வேப்பங்கொட்டைச்சாறு 5 சதவிதம் அல்லது பாஸில்லஸ் துரிஞ்சியன்ஸிஸ் 2 கிராம் / லிட்டர் நீரில் தெளிக்கவும்

**2. காய் துளைப்பான், ஈடியெல்லா சின்கினெல்லா**

**சேதத்தின் அறிகுறி:**

- காய்களில் சிறிய துளையிட்டு விதைகளை சேதப்படுத்தும்

**பூச்சியின் விபரம்:**

- முட்டை - சிறிய, வெள்ளை நிறமாகவும், கேலிக்ஸ் மற்றும் காய்ப்பகுதியில் முட்டையிடும்
- புழு - மேற்பகுதியில் இளஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும். கீழ் பகுதியில் பச்சை நிறமாகத் தோன்றும். அந்துப்பூச்சியின் இறக்கைகளில்

வெள்ளை பட்டை போன்று காணப்படும் . பூச்சி வெளுப்பு நிறமாகக் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- கையால் பொறுக்கி அழிக்கவும்
- தாக்கப்பட்ட காய்களை புழுவோடு அழித்துவிடவும்
- பூக்கும் தருணத்தில் 0.1 சதவிதம் பி.டி தெளிக்கவும்
- ட்ரைக்கோகிரம்மா கைலோனிஸ் 5 சிசி / எக்டர் விடலாம்
- எக்டர்க்கு 1 விளக்குப்பொறி வைக்கலாம்